

லயன்
காமிக்ஸ்
மின்னலோடு ஒரு மோதல்!
8-வது ஆண்டு மலர்!
ரூ. 3/-

# ஹாட்-லைன்!

வாசக நண்பர்களே,

"**கத்தி முனையில் மாடஸ்டி**"யில் துவங்கிய நமது காமிக்ஸ் பயணத்தின் இன்றைய வயது (சுமார்) 2920 நாட்கள்! ஆமாம் - **இது நமது எட்டாவது ஆண்டுமலர்!**

மகிழ்ச்சியான இந்த நேரத்தில் வாசகர்களாகிய உங்களுக்கு ஒரு சின்னப் போட்டி! இது வரை வெளிவந்துள்ள ஏழு ஆண்டு மலர்களின் பெயர்களையும் குறிப்பிட்டு எழுதி அனுப்புங்கள்! சரியான
பெயர்களை எழுதி அனுப்பும் முதல் ஐந்து வாசகர்களுக்கும் ஓராண்டுச் சந்தா பரிசு! பெயர்களை எழுதி அனுப்புவதற்கான கூப்பன் எதிர் பக்கத்தில் உள்ளது!

இந்த மாத இதழில் நீண்ட நாட்களுக்குப் பிறகு **ஆக்ஷன் ஹீரோ சைமன்** சாகஸம் செய்கிறார்! (இதற்கு முன் - "**ஆபத்தைத் தேடி**" என்ற கதையில், இவர் அறிமுகமானது நினைவுள்ளதா?)

அடுத்த மாதம் காரிகனின் '**இரத்தமில்லா யுத்தம்**' வருகிறது! வித்தியாசமான, மிக, மிக யதார்த்தமான கதை இது! அமெரிக்க ஜனாதிபதிப் பதவிக்கு போட்டியிடும் ஒரு சுயேச்சை வேட்பாளரை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது கதை! அமெரிக்காவில் நிஜமாகவே ஜனாதிபதித் தேர்தல் சூடு பிடித்துக் கொண்டிருக்கும் இந்நேரத்தில் இந்தக் கதையை வெளியிடுவது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

செப்டம்பர் மாதம் ரிப் கிர்பியின் "**கானகக் கோட்டை**" வருகிறது!

அக்டோபரில் **தீபாவளி மலராக** டெக்ஸ் வில்லரின் மிகப் பெரிய கதை ஒன்று வரயிருக்கிறது! அதற்கான விளம்பரத்தை அடுத்த இதழில் பார்க்கலாம்!

இந்தப் பகுதியை முடிப்பதற்கு முன் ஒரு முக்கியமான விஷயம் பாக்கியுள்ளது! கிருஸ்துவ வாசகர்களுக்கு thanks giving day பற்றித் தெரிந்திருக்கும். அதாவது - நமக்குக் கிடைத்துள்ளதையெல்லாம் எண்ணி கடவுளுக்கு நன்றி சொல்லும் தினம்!

எங்களைப் பொருத்தவரை இது thanks giving month! தொடர்ந்து எங்களது முயற்சிகளுக்கு உறுதுணையாக நின்று வரும் வாசகர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் நாங்கள் நன்றி சொல்ல வேண்டிய மாதமல்லவா இது?

கடவுள் துணையும், உங்களின் நீடித்த ஆதரவும் இருக்கும் வரை நமது காமிக்ஸ் பயணம் தொடர்ந்து கொண்டேயிருக்கும் என்பது உறுதி!

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்! அதுவரை -

**Happy reading!**

அன்புடன்,

எஸ். விஜயன்

(ஆசிரியர்)

# ஆண்டு மலர் பரிசுப் போட்டி!

**வாசகரின் பெயர் & முகவரி :**

1) '85 ஆண்டு மலர் ______________________

2) '86 ஆண்டு மலர் ______________________

3) '87 ஆண்டு மலர் ______________________

4) '88 ஆண்டு மலர் ______________________

5) '89 ஆண்டு மலர் ______________________

6) '90 ஆண்டு மலர் ______________________

7) '91 ஆண்டு மலர் ______________________




''ஹாலி டே சூப்பர் ஸ்பெஷல், தூள் கிளப்பிவிட்டது. அட்டைப்படம் அட்டகாசம் சார். இது போன்று பெரியசைஸில் பிரகாசமான அட்டைப்படத்துடன் வெளியிட்டீர்களானால் சூப்பராக இருக்கும். டெக்ஸ்வில்லர், காரிகன், ரிப்போர்ட்டர் ஜானி போன்றவர்களின் முழுநீள சாகஸங்களை அடிக்கடி வெளியிடுங்கள் சார். சில சமயங்களில் இவர்களுடைய கதைகளில் உற்சாகம் பிய்த்துக் கொண்டு போவது ஏனெனில் இறுதிவரை எதிரி யாரென்று தெரியாமல் சஸ்பென்ஸாகச் சென்று, இறுதியில் நாம் எதிர்பாராதொரு நபர் எதிரியாக அமைவதுதான். அத்தோடு, எமனுக்கு எமன் போன்ற யுத்தக்கதைகளையும் வெளியிட்டால் சூப்பராக இருக்கும். அதிரடிப்படையை மீண்டும் கொண்டு வரும் ஐடியா இருக்கிறதா சார்?

**MOHAMED HILMY. M. I.**
419, WARAGASHINNA, AKURANA, **SRI LANKA.**


சைமன்
ஜிப்பி
அமெரிக்காவில்... சினிமா நட்சத்திரங்களும், உயர்மட்ட சூதாடிகளும், மொள்ளமாறி கும்பல்களும் இலட்சம் இலட்சமாக பணத்தை வாரியிறைத்து உல்லாசம் நாடும் ''விளையாட்டு அரங்கம்''தான் லாஸ் வகாஸ்! பிரமிப்பூட்டும் சங்கதிகளுக்கு அங்கே ஏகப்பட்ட வரவேற்பு எப்போதும் உண்டு. முன்னாள் பாரகூட் வீரர் சைமனும் அவருடைய உதவியாளர் ஜிப்பியும் அங்கே விடுமுறையைக் கழிக்க வந்திருந்தனர்...
ஏரியின் பளபளக்கும் நீர்ப்பரப்பு. அந்த படு ஆபத்தான தடை ஓட்டப் போட்டி யில் பங்கேற்றிருந்த ஹைட்ரோ பிளேன்களின் இடிமுழக்க உறுமலை எதிரொலித்துக் கொண்டிருக்கையில் சைமனின் கலம் ஜிவ்வென்று சீறிப் பாய்ந்து முன்னேறி மற்ற போட்டியாளர்களை சோர்வடையச் செய்தது.
தூள் கிளப்புகிறான்... பாரேன்!
சைமன்தான் வெற்றி பெறுகிறார் - பந்தயம்... ஆயிரம் டாலர்கள்!

# மின்னலோடு ஒரு மோதல்!


காற்றின் இரைச்சலும், எஞ்சினின் உறுமலும், நீரின் குமுறலும் சைமனுக்கு இன்னிசையாக கிளர்ச்சியூட்டின.... ஏகப்பட்ட உற்சாகம் அவருக்கு!
படார்!
177
வழக்கு, புலனாய்வு என்று எந்தப் பிடுங்கலும் இல்லை. இதமான சாந்தி நிலவும் அமைதிச் சூழல்... ஆகா விடுமுறையை கழிக்க வேறு பொருத்தமான இடம் பூமியில் இருக்குமா என்ன?
ஆனால் ஜிப்பியின் எண்ணவோட்டம் எதிர்மாறாக இருந்தது. சைமனின் குணத்தை நன்று அறிந்திருந்த ஜிப்பி ஏதோ விபரீதம் நிகழப் போகிறது என்ற எதிர்பார்ப்பில் பதைபதைத்துக் கொண்டிருந்தான்.
இந்த ஆர்ப்பாட்டம் நல்லதற்கில்லை...! இரண்டு கொலைகள், ஒரு கோஷ்டி மோதல், ஒரு பூகம்பம் - இது மாதிரியான விவகாரங்கள்தான் அவருக்கு உண்மையான மகிழ்ச்சியை தரும்-
மிகச் சுலபமாக போட்டியில் வெற்றி ஈட்டி விட்ட சைமன், அடுத்த நிகழ்ச்சிக்காக திரும்பி வந்து சேர்ந்தார்.
ஏய்... ஜிப்பி! அடுத்த நீர்ச்சறுக்கு பலகையில் நான் போகும் போது நீயும் என்னோடு வருகிறாய்! நாம் ஏற்கனவே பயிற்சி எடுத்துக் கொண்ட சாகஸ அம்சங்களை வெளிப்படுத்தி அனைவரையும் வாயைப் பிளக்க வைப்போம்...!
177
அங்கே வேலை காத்துக்கிடக்கிறது நிறைய...! நீங்களானால் இங்கே பொழுதை வீணடித்துக் கொண்டு -


ஊஹீம்... இவரை திருத்தவே முடியாது என்று நினைத்துக் கொண்டான் ஜிப்பி.
நன்றாக பிடித்துக்கொள்... அப்பனே!
அவ்வேளையில் சைமனின் ஹைட்ரோ பிளேன் நிறுத்தப் பட்டிருந்த இடத்தை நோக்கி, திட்டமிட்டே சைமனைப் போல் உடையணிந்த ஒரு ஆசாமி படகில் விரைந்து கொண்டிருந்ததை எவருமே கவனிக்கவில்லை.
அதோ.. ஹைட்ரோபிளேன் எனக்காகவே காத்துக் கொண்டிருக்கிறது. எல்லாமே நான் திட்டமிட்டபடி நடந்து வருகிறது.
மறு நிமிடம் - சைமனின் ஹைட்ரோ பிளேனை கிளப்பிக் கொண்டு உச்ச வேகத்தில் பறந்தான் அந்த ஆள்.
177
சைமன் என்னை ஏமாற்றிவிட மாட்டார் என்று நம்புகிறேன்.
திடீரென்று ஜிப்பி உரத்த குரலில் கத்தினான்.
ஹே...! எவனோ ஒருத்தன் உங்களுடைய ஹைட்ரோ பிளேனை அபேஸ் பண்ணிக் கொண்டு போகிறான்.
ஆமாம்..! நீ கீழே குதி - அவனை விரட்டிப் பிடிப்போம்!


மறுகணம் - அந்த நீர்ச் சறுக்குப் பலகை புயலென சீறிக் கொண்டு விரைந்தது.
சைமனுக்கு திடீரென்று புத்தி பேதலித்து விட்டதா என்ன?
ஆசாமியை அடையாளம் கண்டு கொள்ள விழிகளை இடுக்கி உற்றுப் பார்த்தார் சைமன்..
என் ஹைட்ரோ பிளேனை திருடி விட்டு தப்பியோடிவிட முடியும் என்று நினைக்கிறவன் பலே ஆசாமியாகத்தான் இருக்கக்கூடும்.
திருடனும் சாமர்த்தியத்தில் தான் சளைத்தவனில்லை என்று நிரூபித்துக் கொண்டிருந்தான்.
குட்...! சைமன் நான் எதிர்பார்த்த மாதிரியே பின் தொடர்ந்து வருகிறான்! நெருங்கி வா -சைமன்! என் சூழ்ச்சி பலிக்க உன்னைத்தான் பெரிதும் நம்பிக் கொண்டிருக்கிறேன்!
177


உப நதியின் கரையில் ஓர் அழகிய வெள்ளை மாளிகை தென்பட்டதும் வேகத்தை மட்டுப்படுத்தினான் எதிரி.
அந்தக் கட்டிடம் - வின்ஸ் என்ற ரௌடியின் '45 - கிளப்' என்னும் ஆடம்பர சூதாட்ட அரங்கமாகும்...!
அட.. வின்ஸின் சூதாட்ட அரங்கை நோக்கிப் போகிறானே? - ஏன்? வின்ஸ் ஒரு நச்சுப் பாம்பாயிற்றே?
மம்... ஆபத்து ஆரம்பமாகிவிட்டது என்பதற்கு அறிகுறியாக என் மூக்கு நுனியில் நமைச்சல் எடுக்கிறது!
ஹைட்ரோ பிளேனை நிறுத்தி பளிச் சென்று கரையில் குதித்த எதிரி வெள்ளை மாளிகையின் 'அவசர வழி' வழியாக மேலே பாய்ந்தோடினான்.
இப்படி அம்போவென்று ஹைட்ரோ பிளேனை விட்டுச் செல்லவா கஷ்டப்பட்டு அதை திருடிக் கொண்டு வந்தான்!
என்னை இங்கே வரவழைக்கும் சூழ்ச்சி இது என்று இன்னுமா உன் மரமண்டைக்கு புரியவில்லை?
சைமனும் விடுவதாக இல்லை.. எதிரியை பின் தொடர்ந்து சென்றார்.
சூழ்ச்சி என்று தெரிந்த பிறகும் இப்படி பின் தொடர்வது தற்கொலைக்கு ஒப்பானது இல் லையா?


ஜிப்பியின் எச்சரிக்கையை சைமன் காதில் போட்டுக் கொள்ளவேயில்லை. எதிரி நுழைந்து மறைந்த ஜன்னலின் பின்னால் அப்படி என்ன இருக்கும் என்றறியும் அவா அவரை உந்தித் தள்ளியது.
அவன் இவ்வளவு சிரமப்படு கிறான் என்றால் ஏதோ பெரிதாக திட்டமிட்டிருக்கக்கூடும்...! அதை தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் இந்த 'வலை விரிப்பி னுள்' நான் இறங்கித்தானுக வேண்டும்!
எதிரி யார், அவன் பலம் என்ன என்று தெரியாத நிலையில் சைமனின் முயற்சி எந்த வினாடியிலும் உயிருக்கே ஆபத்தை விளைவிக்கலாம் என்று அஞ்சினான் கீழே நின்றிருந்த ஜிப்பி.
எதிரி நுழைந்த ஜன்னலை சென்றடைந்து பார்வையை உள்ளே நீளவிட்ட சைமன். உள்ளே கண்ட காட்சி அவரை சற்று நிதானிக்க வைத்தது.
ஊஹீம்... நான் கரடியாக கத்தினாலும் மனுஷர் கேட்கவா போகிறார். அவர் பத்திரமாக திரும்பி வர வேண்டும் என்று ஆண்டவனை வேண்டுவதைத் தவிர நான் வேறு என்ன செய்ய முடியும்?


உள்ளே - வின்ஸின் பெட்டகத்தை திறந்து உள்ளேயிருந்த பொக்கிஷங்களையும், கரன்ஸிகளையும் வாரி எறிந்து எதையோ பரபரப்பாக தேடிக் கொண்டிருந்தான் எதிரி...
அது இங்கேதான் இருக்கக் கூடும்...! எப்படியும் நான் அதை கண்டுபிடித்தாக வேண்டும்- அதுவும் உடனடியாக! சைமன் இந்நேரம் நெருங்கி வந்து சேர்ந்திருக்கலாம். இவ்வளவு புத்திசாலித்தனமாக சூழ்ச்சி நாடகம் ஆடிய பிறகு எதையும் கோட்டைவிட நான் தயாரில்லை.
உறையிட்ட அவனுடைய கைகளில் அகப்பட்ட அந்தப் பொருளை பார்த்ததும் அவன் உற்சாகமடைந் தான்! அது ஒரு சீட்டுக்கட்டு!
மின்னல் வேகத்தில் ஜன்னல் வழியாக உள்ளே பாய்ந்தார் சைமன்.
என்னை சாட்சி வைத்துக் கொண்டு திருடுகிற இவனுடைய நோக்கம் என்னவாக இருக்கும்?


புஸ்ஸ்
எதை எதையோ சமாளிக்க தயாராக இருந்தார் சைமன். ஆனால் - வாயுத் துப் பாக்கி பிரயோகிக்கப்படும் என்று அவர் கொஞ்சமும் எதிர் பார்க்கவேயில்லை. நேராக முகத்தில் பீச்சியடிக்கப்பட்ட வாயு அவரை உடனே நினைவிழக்கச் செய்தது.
விகாரமாக இளித்தவாறு அந்த சீட்டுக் கட்டை தன் பைக்குள் திணித்துக் கொண்ட அந்தக் கயவன் தான் வாரியிறைத்த பொக்கிஷங்களை ஒன்று திரட்டினான்..
பத்தே வினாடிகளில் உன் மயக்கம் தெளிந்து விடும் சைமன்! எனக்கு அது போதும்...! சுயவுணர்வு வரப் பெற்றதும் நான் எதிர்பார்க்கிற மாதிரியே நீ நடந்து கொள்வாய் என்று நம்புகிறேன்!
மயக்கம் தெளிந்து எழுந்ததும் சைமன் தோற்றுவிட்ட ஆவேசத் தோடு ஜன்னல் வழியே பாய்ந்து எதிரியை தேடி ஓடலானார்..
சாதாரண திருடன் என்றால் என்னை ஏன் இங்கே வரச் செய்ய வேண்டும்! அவனுடைய நட வடிக்கைகள் ரொம்பவும் புதிராக இருக்கின்றன. அவனுடைய மென்னியில் நான் கை வைத்ததும் எல்லாம் விளங்கிவிடும்!


மயக்க வாயு தன்னை தள்ளாடச் செய்த போதிலும் துவண்டு விடாமல் எதிரியை குறி வைத்து தடைகளை தாண்டி முன்னேறினார் சைமன்..
அவனுக்கும் எனக்கும் இடையே யுள்ள இடைவெளியை குறைக்க ஏதாவது ஒரு தந்திரத்தை கையாண்டால்தான் உண்டு.
அருகில் இருந்த கிரேனின் கேபிள், முன்னாள் பாராசூட் வீரரான சைமனுக்கு ஒரு ஐடியா கொடுத்தது.
நான் மயங்கி விழுந்ததும் அவன் என்னை கட்டிப் போட்டுவிட்டு வெகு சுலபமாக தப்பியோடி யிருக்கலாம். அதை ஏன் அவன் செய்யவில்லை..? அவனை நான் பின் தொடர்ந்து வர வேண்டும் என்று அவன் விரும்பக் காரணம்?
சாலையின் குறுக்கே பாலமாக இருந்த நியான் விளக்கு அவர்களின் திறமைக்கு ஒரு சவாலாக நின்றது...
பிடி நழுவியதோ ஒரு எலும்பு கூட உருப்படியாக மிஞ்சாது..!


இன்னமும் இடைவெளி கணிசமாக இருந்தது...
திருடன் ஜன்னல் வழியே உள்ளே நுழைந்து மறைந்து விட இன்னமும் வெளியே இருந்த சைமனை கீழே அப்போது வந்து சேர்ந்த ரோந்துப் போலீஸார் பார்த்து விட்டனர்.
மயக்க வாயுவை சுவாசித்த நீ பிடி நழுவி கீழே விழுவாய் என்று எதிர்பார்த்தேன்.. ஆனால் தாக்குப் பிடித்து விட்டாய். எனவே, என் திட்டத்தில் சிறு மாற்றம் அவசியமாகி விட்டது!
ஹே... எவனோ வின்ஸின் சூதாட்ட அரங்கினுள் நைச்சியமாக நுழைய முற்படுகிறான் - அல்லது - தற்கொலை செய்து கொள்வது அவனுடைய நோக்கமாக இருக்கலாம்...
எதுவானாலும் எச்சரிக்கை அறிவிப்பை கொடுத்துவிடு!
உள்ளே போன கயவன் நியான் விளக்கை எரியச் செய்யும் சுவிட்சை தேடிக் கண்டு பிடித்தான்.
விளக்கில் மின்சாரம் பாய்ந்ததும் சைமன் சட்டென்று பின்னுக்குச் சரிந்தார்.



தரையை நோக்கி நழுவிய சைமனின் உடல் மீது தான் அள்ளி வந்த பொக்கிஷங்களை தூவினான் எதிரி.
இவை எல்லாமே உனக்குத் தான்.... சைமன்! இந்த கொள்ளைப் பொருட்களை உன் உடல் அருகே போலீஸார் காண வேண்டும்!
எதிரியின் திட்டம் ஏறத்தாழ முழு வெற்றியடைந்து விட்டது...
உன் சடலத்தருகே கொள்ளைப் பொருட்கள் சிதறிக் கிடப்பதை பார்க்கும் எவருக்குமே நீ இங்கே திருட வந்ததாகத்தான் நினைக்கத் தோன்றும்!
கீழே... விழும் பாதையில் சற்று விலகி வெயில் தடுப்பு தளம் ஒன்று வெளியே நீட்டிக் கொண்டிருப்பதைக் கண்டார் சைமன்.
ஓ... உயிர் பிழைக்க இதோ ஒரு வாய்ப்பு!


சட்டென்று ஒரு காலை நீட்டி அந்த தடுப்பை ஓங்கி உதைத்தார்..
அதன் விளைவாக அவர் விழுவது திசை மாற்றமடைந்தது..
சபாஷ்டா.. சைமன்! எச்சில் ஒழுக காத்திருந்த யமகிங்கரர்களை ஏமாற்றிவிட்டாய்!
சூதாட்ட அரங்கு கட்டிடத்தின் நுழை வாயிலில் இருந்த அகன்ற வெயில் தடுப்பு தளம் சைமனை ஏந்திக் கொண்டு பின்னர் தாக்கு பிடிக்க முடியாமல் தகர்ந்து நொறுங்கியது..
தப்பித்து விட்டேன்!
ஏய்ய்... நீ
அடிபடாமல் ஆனால் அதிர்ந்தவராக தரைக்கு வந்து சேர்ந்தார் சைமன்.


சூதாட்ட அரங்கின் காவலாளி சைமனையும் அவரோடு சேர்ந்து தரையிறங்கிய பொக்கிஷங்களையும் கரன்ஸிகளையும் பார்த்த மாத்திரத்தில் இயற்கையான முறையில் தவறாக புரிந்து கொண்டான்.
ஹே... திருடிப் போக வந்தாயா? வா... வா... பாஸ் உன்னை சந்திப்பதில் ரொம்பவும் ஆர்வம் காட்டக்கூடும்!
நின்று விவாதம் செய்து கொண்டிருக்க அவகாசமில்லை. உண்மையான திருடன் தப்பிச் சென்று விடுவான். எனவே, காவல்காரனுக்கு அருமையான ஜூடோ வெட்டு ஒன்றை நல்கினார்..
படீர்!
மன்னித்துக் கொள்... நண்பனே! வேறொரு வாடிக்கையாளரை நான் தேடிச் செல்ல வேண்டிய நெருக்கடி!
மறு வினாடி - எச்சரிக்கை அழைப்புக் கேட்டு அங்கே வந்து குவிந்த போலீஸ் ரோந்துக் குழுக்களுக்கு மத்தியில் தான் இருப்பதைக் கண்டார் சைமன்.
அசையாதே...! கைகளை உயர்த்து!
சே... எக்கச்சக்கமாக மாட்டிக் கொண்டுவிட்டேனே..!
உன் நண்பனை கைது செய்து விட்டோம்..! விஷமத்தனமாக எதையும் செய்ய நினைக்காதே!


சந்தர்ப்ப சாட்சியங்கள் சைமன், ஜிப்பி இருவருக்கும் எதிராக மிக வலுவாக இருந்தன. முன்னாள் பாரசூட் நிபுணரான சைமன் போன்ற துணிச்சல் பேர்வழிகள் தான் '45-கிளப்'பினுள் நுழைய முடியும் என்று கருதப்பட்டது. அத்தோடு சைமன் கையும் களவுமாக அகப்பட்டுக் கொண்டதுதான் பரிதாபம். உண்மை திருடன் தடயமே இல்லாமல் மறைந்து போய்விட்டான்.
வழக்கு நடந்து முடிந்தது..
நான் நிரபராதி.. அபாண்டமாக பழி சுமத்தப்பட்டிருக்கிறது என்மீது.
வின்ஸ் எவ்வளவு மோசமான நபர் என்கிற விஷயம் இவ் வழக்கில் கோர்ட்டாரின் கருத்தை பாதிக்கப் போவதில்லை. நீங்கள் இருவரும் குற்றவாளிகள் என்பது
ஜூரிகளின் கருத்து. உங்கள் இருவருக்கும் ஓராண்டு கடுங் காவல் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கிறேன்...
கடலின் நடுவே ஒரு பெரிய பாறையின் உச்சியில் இருந்த அந்த சிறையிலிருந்து இதுவரை எவருமே தப்பித்து வெளியேறியதாக சரித்திரமே கிடையாது.
திருடன் நம்மீது பழிபோட காரணம் என்னவாக இருக்கும்? மொத்த விவகாரமும் பைத்தியக் காரத்தனமாக தோன்றுகிறது. வின்ஸின் பெட்டகத்தை அவன் தேட்டை போட்டது உங்களை மாட்டிவிடத்தான் என்று தோன்றுகிறது!
அப்படியில்லை...! அவன் ஒரே ஒரு பொருளை தன்னோடு எடுத்துச் சென்று விட்டான். - அது ஒரு சீட்டுக்கட்டு! அதைப் பற்றி விசாரணையில் வெளி வரவேயில்லை. சீட்டுக் கட்டை எடுத்துச் செல்வதுதான் அவனுடைய நோக்கம். என்னை அவன் மாட்டிவிட்டது தன் திருட்டு வெளிப்படாமலிருக்கவே!



சிறைச்சாலையை சென்றடைந்ததுமே சைமன் தன் திட்டத்தை தீர்மானித்துக் கொண்டுவிட்டார்...
அந்த சீட்டுக்கட்டில் ஏதோ மர்மம் இருக்கிறது ஜிப்பி. திருடனை பிடித்து சீட்டுக்கட்டை மீட்டு அந்த மர்மத்தை உடைத்தால் நாம் நிரபராதிகள் என்று நிரூபித்துவிட
முடியலாம். அந்த சீட்டுக்கட்டை வின்ஸ் பெட்டகத்தினுள் பத்திரப் படுத்தி வைத்திருந்தது. அது சாதாரண சீட்டுக் கட்டு அல்ல என்பதற்கு ஒரு சான்று!
நூற்றுக்கு நூறு சரியான கணிப்பு அது..! அந்த மர்ம சீட்டுக்கட்டைப் பற்றி போலீஸாரிடம் சொல்ல வின்ஸுக்கு தைரியம் இருக்கவில்லை.
திருடு போன பொருட்களை போலீஸார் திரும்பக் கொண்டு வந்து கொடுத்துவிட்டனர் - ஆனால் அந்த சீட்டுக்கட்டு மட்டும் குறைகிறது. சைமன் எப்படியோ அதை மறைத்துவிட்டான்.
எங்கெல்லாமோ தேடிப் பார்த்து விட்டோம்... அகப்படவே யில்லை. இப்போது சைமன் பாறை சிறையில் பலத்த காவலுக்கு மத்தியில் பத்திரமாக இருக்கிறான். கிட்டே நாம் நெருங்கவே முடியாது.



வின்ஸின் நியாயங்களே தனி...! நச்சுப் பாம்பைவிட கொடியவன். காரணம் - விஷம் மட்டுமின்றி பயலுக்கு மூளையும் இருந்தது...!
நான் நினைக்கிற அளவுக்கு சைமனுக்கு விஷயம் தெரிந்திருக்குமேயானால் நிச்சயம் சிறையிலிருந்து தப்பி வெளியேற முயற்சி செய்வான். அப்படி அவன் வெளியே வந்தால் அவனை நான் சந்திக்க வேண்டும்.
அவனோடு நீங்கள் பேச விழை கிறீர்கள்! அதாவது அவனை நாங்கள் உயிரோடு கொண்டு வந்து சேர்க்க வேண்டும்.
வாய்ப்பான தருணத்தை எதிர் நோக்கி பொறுமையோடு நாட்களை ஓட்டினார் கள் சைமனும் ஜிப்பியும். மூடு பனி சூழ்ந்த ஒரு பிற்பகல் வேளையில் சிறைக் கூடத்திலிருந்த தொழில் பட்டறையின் மொட்டை மாடியை சென்றடைந்தது ஜோடி. கீழே - பாசிபடிந்த பாறை மீது ஆக்ரோஷமாக மோதி ஆரவாரித்துக் கொண்டிருந்தது அலை கடல்!
நீரினுள் பாய்ந்து தப்பியோடத் துணிந்துவிட்டார்கள்..!
நில்லுங்கள் - இல்லையேல், சுடுவேன்!
ஜிப்பி சைமனின் முதுகில் தொற்றிக் கொண்டான்.


துப்பாக்கி முழக்கம் எதிரொலித்த வேளையில் அபாய எச்சரிக்கை சைரனும் அலறத் தொடங்கியது.
தப்பவே முடியாது... - இதோ!
ஒள...ஒள...ஒள


முன்னாள் பாரசூட் வீரரின் அசகாய சூரத்தனத்திற்கு அந்த பாய்ச்சல் ஓர் எடுத்துக்காட்டு..
இறுகப் பற்றிக் கொள்...சிறு பிழை நேர்ந்தாலும் நேரே வைகுண்டம்தான்!


ஐயோ... பாவிகள் எங்கள் மீது வந்து விழுந்து தொலைக்கப் போகிறார்களே என்று நீர்ப்பரப்பின் மேலே தலை நீட்டிக் கொண்டிருந்த குத்துப் பாறைகள் பரி தவித்த வேளையில், சாகஸமாக உடலை முறுக்கி, விழும் பாதையை மாற்றி, விலகிப் போய் நீரை தொட்டார் சைமன்- முதுகில் ஜிப்பியோடு!
பிடியை விட்டுவிட்டு விலகிச் செல்...!
பிரகாசமான தொலைவீச்சு விளக்குகள் மூடு பனியை ஊடுருவ முயன்று தோற்றுக் கொண்டிருந்தன...
அப்பப்பா... என்ன ஒரு துணிச்சல்...! ஆனாலும் இது பைத்தியக்காரத்தனமான முயற்சி!
விசைப்படகு எந்த வினாடியிலும் எங்களை துரத்திக் கொண்டு வரக்கூடும்.
அலை அவர்களை திரும்பவும் பாறையை நோக்கி அடித்துச் சென்று விடாதவாறு எதிர் நீச்சல் போட்டார்கள்..


சைமன் கணித்த மாதிரியே சற்றைக் கெல்லாம் விசைப்படகு ஒன்று துறையில் இருந்து கிளம்பியது..
நீந்திக் கரையேறுவது என்பது சாத்தியமே இல்லாத காரியம்..!
இன்னமும் உயிரோடிருந்தால் சில நிமிட சுதந்திரத்தை அனுபவித்த திருப்தியோடு மீண்டும் சிறைக் கம்பிகளை எண்ணப் போகிறார்கள்!


ஜிப்பி விரைவிலேயே சோர்ந்து விட்டான்..
ஊஹூம்... கரை சேருவோம் என்ற நம்பிக்கையே எனக்கு இல்லை!


நீந்திச் சென்று கரை சேரும் நம்பிக்கை எனக்கும் இல்லைதான். ஆனால் நான் வேறொரு திட்டம் வைத்திருக்கிறேன்.
சட்டென்று தன் சட்டையை கழற்றத் தொடங்கினார் சைமன்.
நன்றாக மூச்சை உள்ளிழுத்துக் கொண்டு விடு ஜிப்பி. ஐயோ...! என்று உரக்க ஓலம் எழுப்பி விட்டு, உன்னோடு மூழ்கி, நீர்ப்பரப்பின் கீழேயே நீந்திச் செல்லப் போகிறேன்...! இந்தச் சட்டை இங்கேயே மிதந்து கொண்டிருக்கும் போலீஸாரை ஏமாற்ற!
அடுத்து எழுந்த மரண ஓலம் படகில் இருந்தவர்களின் கவனத்தை ஈர்த்தது.
ஐயோ ஓ ஓ ஓ
விளக்கை அந்த திசையில் திருப்பு... யாரோ நீரில் மிதக்கிறார்கள்.


படகு வேகமிழந்து வந்து நெருங்கியதும் சட்டை மீட்கப்பட்டது. படகில் இருந்தவர்கள் அறியாவண்ணம் சைமனும், ஜிப்பியும் நீர் மட்டத்திற்கு வந்து படகின் மறுபக்கம் தொங்கிய கயிற்றை இறுகப் பற்றிக் கொண்டார்கள்.
விளக்கொளியை இங்கே பாய்ச்ச வசதி இல்லையாதலால் அவர்கள் நம்மை பார்த்து விடும் அபாயம் கொஞ்சமும் இல்லை. அந்த சட்டையை பார்த்ததும்
அவர்களுடைய யூகம் எந்தக் கோணத்தில் திரும்புகிறது என்பதை பொறுத்தது அடுத்து வரப்போகும் நடவடிக்கைகள்...


தேடும் படலம் மீண்டும் முழு வேகத்தில் தொடங்கியது.
இந்தச் சட்டை அவர்களில் ஒருவனுடையது. அக்கம் பக்கத்தில் அவர்களுடைய தலை தென்படாவிடில் மூழ்கிச் செத்துப் போயிருப்பது நிச்சயம்!
வேறு எந்தப் படகும் அவர்களை மீட்டு கரை சேர்த்து விடாதவாறு கரையோர தனியார் படகுக்கு தகவல் கொடுத்து விடுவோம்.


படகு கரையை சமீபித்ததும் இருவரும் பிடியை விட்டு விட்டார்கள்.
அவர்களைக் காணோம்...! இனி தேடுவதில் அர்த்தமேயில்லை... விரைவிலேயே அவர்களுடைய பிணங்கள் அலைகளினூடே மிதப்பதை காணலாம்.
செத்துவிட்டதாக கருதப்பட்ட சைமனும், ஜிப்பியும் படகு திரும்பிச் சென்ற மறு நிமிடமே கரையேறி வேகமாக நடக்கலானார்கள்..
இந்த லாட்ஜில் தங்கி ஓய் வெடுத்துவிட்டு திருடனை தேடிச் செல்லும் பணியை நாளை வைத்துக் கொள்வோம்.
மாற்றுடையும், உணவும் அங்கே அவர்களுக்கு கிடைத்தது.
நாம் நிரபராதிகள் என்று நிரூபிக்க வேண்டுமானால் உண்மை திருடனை தேடிப் பிடிப்பது ஒன்றுதான் வழி!
அந்த சீட்டுக் கட்டில்தான் ஏதோ மர்மம் இருக்கக் கூடும். நாம் போய் வின்ஸை சந்திப்போம்... அவனிடமிருந்து இரகசியங்களை வரவழைக்கத் தேவையான வழி முறை எனக்குத் தெரியும்!


சிறையிலிருந்து தப்பிய இரண்டு கைதிகளும் செத்துவிட்டதாக அறிவிக்கப்பட்டதை நம்பி பலர் ஏமாந்து போன போதிலும் வின்ஸ் அதை நம்பத் தயாரில்லை. எனவே, அவர்களை தேடும் படலத்தை தீவிரப் படுத்தினான். முடிவில்-
பாஸ்... கண்டு பிடித்துவிட்டேன்! அவர்கள் இருவரும் கடல்கரை யோரமாக உள்ள ஒரு விடுதியில் சுகமாக ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார்கள்...
சீட்டுக்கட்டு சைமன் வசம் இருப்பதாக தப்புக் கணக்குப் போட்ட வின்ஸ் அதை மீட்க துடிதுடித்தான்.
காரை எடுத்துச் செல்லுங்கள்.. அவனை உயிரோடு கொண்டு வர வேண்டும்... நான் அடிக்கிற அடியில் சீட்டுக்கட்டு இருக்குமிடத்தை அவன் கதறிக் கொண்டு சொல்லப் போகிறான்... ஏற்கனவே செத்து விட்டதாக அறிவிக்கப்பட்டு விட்ட அவனை பின்னர் நாம் என்ன செய்தாலும் நம் கையில் கறை படியாது!


விடிகாலை வேளையில் வின்ஸின் ஆட்கள் சைமனின் இருப்பிடத் திற்கு சகலஏற்பாடுகளுடனும் வந்தடைந்தனர்.
விஷமம் பண்ண எண்ணாமல் மரியாதையாக சரணடைந்துவிடு சைமன்.. உன்னை எங்களுடைய பாஸ் வின்ஸிடம் அழைத்துச் செல்லப் போகிறோம்.
சீட்டுக் கட்டை எங்கே ஒளித்து வைத்திருக்கிறாய் என்று நீ அவரிடம் சொல்லி விட்டால் உனக்கு கஷ்டம் எதுவும் வராது!


ஆயுதம் ஏதும் கைவசம் இல்லாத சைமனும், ஜிப்பியும் கைகளை உயர்த்தினார்கள்.
சீட்டுக் கட்டு உங்கள் வசம் இருப்பதாக வின்ஸ் நம்புகிறான். இல்லை என்று தெரிந்தால் நமக்கு உடனே சமாதிதான்...!
அதனால்தான் வின்ஸை நான் என் போக்கில் சென்று சந்திக்க நினைக்கிறேன்..


அந்த முன்னாள் பாரசூட் வீரரின் விழி களில் ஒரு விஷமத்தனமான பளபளப்பு...
நீ ஒதுங்கிக் கொண்டு விடு ஜிப்பி.. ஆயுதம் ஏந்திய நான்கு முரடர் களுக்கு எதிராக ஒரு முன்னாள் பாரசூட் வீரன்.. - இம்மாதிரியான நெருக்கடி நாடி நரம்பில் எப்படியொரு துடிதுடிப்பை ஏற்படுத்துகிறது தெரியுமா?
முதுகை காட்டி நிற்க திரும்பும் போது தற்செயலாக இடித்துக் கொண்டு தள்ளாடி சரிவது போல் அருகிலிருந்த காலி டிரம்மினுள் பாய்ந்து நுழைந்து கொண்டார் சைமன்.
தற்செயலான விபத்துப் போல் இது தோன்றும்... ஆனால் வின் ஸின் கைக்கூலிகளின் நிலைமை பரிதாபமாகப் போகிறது... இன்னும் சற்று நேரத்தில்!
விபத்தா, விஷமச் செயலா என்று விவாதித்துக் கொண்டி ராமல் எதிரிகள் கூட்டம் துப்பாக்கியை உயர்த்தி குறி வைத்தது.
டம் டமால்
ஹே - நீ...!
காயப்படுத்தினால் போதும்... உயிரோடு கொண்டு வரச் சொல்லி நமக்கு உத்தரவு!



துப்பாக்கிகள் தோட்டாவை ஒரு முறை கக்கின - காலம் கடந்து! வேகமாக உருண்டு வந்த பாரல் அந்தக் கூட்டத்தினூடே பாய்ந்து முரட்டுத்தனமாக வழி ஏற்படுத்திக் கொண்டு நிற்காமல் விரைந்தது..
க்ராஷ்!
விலகி ஓடுங்கள்...
ஆவ்வ்...!
அங்கே நடப்பதை கண்ட ஜிப்பி பீதியில் உறைந்து போய் நின்றான்.
அச்சச்சோ...! பாரல் ஆற்றை நோக்கி உருண்டோடுகிறது..! அதை நிறுத்த அவரால்கூட முடியாது!
அங்கேயே நில்...! உன் அதிமேதாவி நண்பன் செய்த மடத்தனமான காரியத்தின் விளைவை பார்த்தாயா?
தன் கட்டுப்பாட்டில் இல்லாத பாரலின் போக்கில் போக வேண்டிய நெருக்கடி சைமனுக்கு.. சில வினாடிகளுக்குப் பின் நீரோட்டத்தின் இரைச்சல் செவியை எட்டியதும் திடுக்கிட்டார்..
ஐயோ... மோசம் போனேன்!


எதிரிகள் ஜிப்பியை பிடித்து தங்களுடைய காரில் ஏற்றினார்கள்.
நீர்வீழ்ச்சியின் அடிவாரத்தை நோக்கி காரை ஓட்டு அவன் உயிர் தப்பாவிட்டால் சீட்டுக்கட்டு என்னவாயிற்று என்ற உண்மை வெளிவராமலே போய்விடும்.
அவன் பிணமாகிவிட்டால் வின்ஸுக்கு எவ்வகையிலும் பயன்படமாட்டான்.
நீர்வீழ்ச்சியின் உச்சியிலிருந்து பாரல் கீழே சரிந்த போது சைமன் துணிச்சலாக ஒரு காரியம் செய்தார்.
இப்போது நான் செய்யப் போகும் சாகஸ செயலை மறுமுறை செய்யச் சொன்னால் நிச்சயம் மறுத்துவிடுவேன்...
அடிவாரத்தில் போய கார் கிறீச்சிட்டு நின்றது.
அதோ! பாரல் நொறுங்கிப் போய் தனித்தனி பலகைகளாக மிதந்து வருகிறது. சைமனின் தலை எங்கேயும் தென்படவில்லை.
பாவிகளா... இனியும் நான் இழக்கப் போவது எதுவுமில்லை. எனவே -


அசட்டுத் துணிச்சலோடு ஆக்ரோஷமாக எதிரிகள் மீது ஜிப்பி பாய முற்பட்ட போது, கரையோரம் கிடந்து ஓர் உருவம் திடுமென எழுந்திராவிடில் நேரே பரலோகம் போயிருந் திருப்பான்.
ஸார்... நீங்களா?
ரொம்ப அவசரமோ!


சைமனை உயிரோடு பிடித்து வர வேண்டும் என்ற உத்தரவு எதிரிகளுக்கு ஒரு தடையாக இருந்தது. ஆனால் அப்படி ஒரு கட்டுப்பாடு இல்லாத சைமன் இஷ்டம் போல் தாக்கினார்.
நீங்கள் மூழ்கி மடிந்துவிட்டீர் களோ என்று பயந்து போனேன்.


சைமன் தாக்குவதை நிறுத்திய போது நான்கு முரடர்களும் பிழிந்து உதறிய ஈரத்துணியாக துவண்டு போயிருந்தனர்.
போனில் பேச வேண்டும் என்றால் கூட இந்த மாங்காய் மடையர்கள் வெகு தொலைவு நடந்து போக வேண்டும். அவர்களுடைய துப்பாக்கிகளை பொறுக்கி எடுத்துக் கொண்டு வந்து வண்டியில் உட்கார். நமக்கு கார் வசதி ஏற்பாடு செய்த வின்ஸுக்குத்தான் எவ்வளவு தங்க மனது..!
மனுஷன் கொதித்துப் போய்விடு பான் - விஷ தெரிந்தால்!
யாரை பிடித்து வர வின்ஸ் ஆட்களை அனுப்பினானோ அவரே தன்னிச்சையாக அவனை தேடிச் சென்று கொண்டிருந்தார்.
சீட்டுக்கட்டு எங்கே போயிற்றோ தெரியவில்லை. ஆனால் அதன் மகத்துவம் என்ன என்று வின்ஸிட மிருந்து தெரிந்து கொள்ளப் போகிறேன். அந்தப் புதிர் மட்டும் விடுபடுமானால் அப்புறம் திருடனை கண்டுபிடிப்பது சுலபமான காரிய மாகிவிடலாம்!
போலீஸாரும், சிறை அதிகாரி களும் நாம் மடிந்துவிட்டதாக நம்பிக் கொண்டிருப்பது ஒருவகையில் நம் அதிர்ஷ்டமே..!
வின்ஸை விரைந்து சந்திக்கும் துடி துடிப் பில் சைமன் ஒன்றை அடியோடு மறந்து விட்டார்.... - வேக கட்டுப்பாடு!
தலை தெறிக்கும் வேகத்தில் வருகிறான் பார்...
HIGHWAY
நிறுத்தி வழக்கு பதிவு செய்வோம்!


சைமன் நின்று பதில் சொல்லிக் கொண்டிருக்க அவகாசம் இல்லாதவராக ஆக்ஸிலேட்டரை அழுத்தமாக மிதித்தார்...
பின்னால் துரத்திக் கொண்டு வருகிறார்கள்... ஸார்!


சைமன் எதிர்பார்த்ததுதான்....
எப்படியாவது கழற்றிக் கொண்டு நழுவி விடுவோம்... இறுக பிடித்துக் கொள்...
எச்சரிக்கை மெதுவாக ஓட்டிச் செல்லவும்-வெப்ப நீரூற்று பிராந்தியம்!
ஸார்... இது - ஆபத்தில்லையோ?


போலீஸாரும் விடுவதாக இல்லை.
தண்ணி காட்டிவிட்டு தப்பி ஓடிவிடலாம் என்று நினைக்கிறார்களா...! தொலைத்து விடுவேன் - தொலைத்து..! அகப்படட்டும்... பத்து வகையான குற்றச்சாட்டுகளை பதிவு செய்யாமல் விடமாட்டேன்.


நீராவியை கக்கிக் கொண்டிருந்த வெப்ப நீரூற்றுக்களின் நெருக்கத்திலேயே காரை செலுத்திச் சென்று கொண்டிருந்தார் சைமன்..
நீராவி மூட்டத்தினூடே நம்மை கண்டு பிடித்து பின் தொடர திணறிப் போய் விடுவார்கள்..
தாங்களும் சளைத்தவர்கள் இல்லை என்பது போல் விடாமல் பின் தொடர்ந்து வந்தார்கள் போலீஸார். இடைவெளி அப்படியே நீடித்தது.
இவ்வளவு வேகமாக சென்றும் இடைவெளி குறைந்த பாடில்லையே!
அவர்களுடைய பிடிவாதம் எனக்கு உற்சாகமூட்டுகிறது.
மறு வினாடி - எருமை மந்தை ஒன்று வழியில் குறுக்கிட்டது.
அவர்கள் நின்றுதானாக வேண்டும் - அகப்பட்டுக் கொள்வார்கள்!
ஆவ்வ் - பிரே...க்!


காரை நிறுத்தினால் காரியம் கெட்டு விடும் என்று நினைத்தார் சைமன்.
சுத்த பைத்தியக்காரத் தனம்...
HIGHWAY
விபத்துக்குள்ளாகி சாகப் போகிறார்கள்...
செயல் வீரர் மட்டுமல்ல... சைமன் ஒரு மதியூகியும் கூட... அவர் போடும் கணக்கு தப்பாவதே யில்லை... போலீஸ் கார் டிரைவர் தான் எருமைகளை சமாளிக்க முடியாமல் திணறிப் போனான்.
நாம் சமாளித்து வெளியேறி விட்டோம் .. பாவம் அவர்கள்தான் மாட்டிக் கொண்டு திண்டாடுகிறார்கள்.
போலீஸ் கார் பின் தங்கி விட்டது என்பதற்காக சைமன் வேகத்தை மட்டுப் படுத்தவில்லை. உச்ச வேகத்தில் தொடர்ந்து சென்று பிரதான சாலையை சென்றடைந்தார்.
ரேடியோ மூலம் எல்லா ரோந்து கார்களுக்கும் இந்நேரம் தகவல் போயிருக்கும் - நம்மைப் பற்றி!


ஆனால் நாம் போலீஸாரிடம் அகப்பட்டுக் கொள்ளாமல் வின்ஸின் இருப்பிடத்தை சென்றடைய வேண்டும்.
அப்படி அந்த சீட்டுக் கட்டில் ஒளிந்திருக்கும் மர்மம் தான் என்ன?
A
Q
3
4
9
தூரத்தை விழுங்கியவாறு கார் விரைந்து கொண்டிருந்தது... எதிரே எந்த போலீஸ் வேனும் கண்ணில் படவில்லை.
சைமனின் நம்பிக்கை வளர்ந்தது.
அதிர்ஷ்டம் நம் பக்கம் இருந்தால் அடுத்த ஒரு மணி நேரத்தில் சூதாட்ட அரங்கை நாம் சென்றடைந்து விடுவோம். வின்ஸ் எதிர்பாராத தருணத்தில் நாம் போய் திடும் என நின்றாலே பாதி வெற்றி ஈட்டிய மாதிரி!
சைமன் அவசரப்பட்டு பேசி விட்டார். தொங்கு பாலம் ஒன்று வாகனங்களை சோதிக்க போலீஸாருக்கு அருமையான மையமாக அமைந்தது.
லைசன்ஸ் பரிசோதனை நடக்கிறது போலும்... நிச்சயமாக நாம் மாட்டிக் கொள்ளப் போகிறோம்.
கலவரமடையாதே... நிறுத்தும் உத்தேசம் எனக்கில்லை.


அப்போது, ஆற்றில் ஒரு பெரிய கலம் வந்து கொண்டிருந்தது. தடையை தகர்த்துக் கொண்டு ஓடிப்போகும் சைமனின் திட்டம் இனி பலிக்காது.
கப்பல் வருகிறது..! தடையை போட்டு பாலத்தை உயர்த்து..!


பிரம்மாண்டமான இயந்திரம் ஒன்று பேரிரைச்சலோடு இயங்கத் தொடங்கியதை அடுத்து தடை கீழிறங்கி வந்தது- போக்குவரத்தை நிறுத்த..
ஸார்... பாலம் திறக்கப்படுவதற் கான எச்சரிக்கை மணி ஒலிக்கத் தொடங்கிவிட்டது... நிதானம் தேவை.


ஊஹீம்.. சைமன் துணிந்து விட்டார்.. இன்னும் தரையை தொடாத முனையின் பக்கமாக காரை வளைத்து திருப்பி பாலத்தில் விரைந்தார்.
STOP
ஸார்... நிறுத்துங்கள்! பாலம் பிரிந்து மேலெழும்புகிறது!


சைமன் காரை நிறுத்துவதாக இல்லை...
போலீஸுக்கு கடுக்காய் கொடுத்துவிட்டு இரண்டு போர்வழிகளும் இடைவெளியை தாண்டி தப்ப முயற்சிக்கிறார்கள் பாரேன்..
நடக்கிற காரியமா...? தற்கொலை முயற்சி இது!
உச்ச வேகத்தில் கார் பறந்து கொண்டிருந்தது.
ஜிப்பி... பயத்தில் மூர்ச்சை போட்டுவிடாதே- தைரியமாக இரு!


இடைவெளி சற்று அதிகம்தான்... ஜிப்பி உயிரை கையில் பிடித்துக் கொண்டு மிரட்சியோடு பார்த்துக் கொண்டிருந்தான்.
இதோ...!


சைமன் சாதித்துவிட்டார்...! முழுத் திறமையையும் வெளிக்காட்டும் திட்டமிட்ட சாகஸம்!
நம்ப முடியாத சாதனை..! சாகஸ வீரர்களால் மட்டுமே இதை சாதிக்க முடியும்!
இருக்கலாம்! ஆனால் சும்மா த மாஷுக்காக இந்த படு ஆபத்தான காரியத்தை அவர்கள் செய்திருக்க மாட்டார் கள்.. எண்ணத்தில் செயலில் நிச்சயம் குற்றமிருக்கும்..


தப்பி விரையும் காரைத் தேடி ரோந்துக் கார்கள் நாலாதிசைகளிலும் அலைந்து கொண்டிருந்தன. வலை இறுகி வருவதை சைமன் புரிந்து கொண்டார்.
நகர போலீஸில் பாதி நம்மைத் தேடி அலைந்து கொண்டிருக் கையில் எப்படி அதிரடியாக வின்ஸின் முன்னால் போய் நாம் நிற்கப் போகிறோமோ?
அருமையான கேள்வி! ஆனால் நம்பிக்கையை இழக்காதே! இந்தக் காரை விடுத்து மிச்ச தூரத்தை இரயிலில் கடப்போம்.
சட்டென்று காரை பக்கவாட்டில் திருப்பினார் சைமன்.
ஸார்..! நீங்கள் - ?
கவலைப்படாதே! இரயிலின் விசில் சப்தம் சற்றுமுன் காதில் விழுந்தது. ஸ்டேஷனை நோக்கி இப்போது நாம் போய்க் கொண்டிருக்கிறோம்!


விர்ர்ர்
மரங்களிடையே வளைந்து நெளிந்து சென்ற பாதை வழியே காரை செலுத்திச் சென்ற சைமனை பின்தொடர்ந்த போலீஸாருக்கு பாவம் ஏகப்பட்ட தொல்லைகள்.
இந்த ஏற்றம் இரயில்வே லைனின் அருகே போய் முடிகிறது என்று நினைக்கிறேன்.
இந்தக் கட்டத்தில் போலீஸின் கையில் நாம் சிக்கினோமோ ஆயுள் தண்டனை உறுதி!
மேட்டின் உச்சியை கார் சென்றடைந்த போது கீழே இரயில் வந்து கொண்டிருந்தது.
வாடிக்கையான யுக்திதான்! என் முதுகில் தொற்றிக் கொள்!
மறுகணம் - ஜிவ்வென்று கீழே குதித்தார் சைமன்...


மர உருளைகளை ஏற்றிச் சென்று கொண்டிருந்த சரக்கு இரயில், டிக்கட் இல்லா பயணிகள் இருவரையும் எவ்வித முணு முணுப்புமின்றி ஏற்றுக் கொண்டது..
அடேய் வின்ஸ்... இதோ வந்து கொண்டிருக்கிறோமடா - லாஸ் வகாஸ் நோக்கி..
நம் மீது சுமத்தப்பட்டுள்ள வீண்பழியை துடைக்க உண்மையான குற்றவாளியை கண்டுபிடித்து அவனுடைய முகமூடியை கிழிக்க வேண்டும்.
அந்த திருடனை தேடிச் செல்ல வின்ஸிடமிருந்துதான் தகவல் பெறவேண்டும் என்பதுதான் உதைக்கிறது..
இரயில் நகருக்குள் செல்வதற்கு முன் பாகவே தோழர்கள் இருவரும் இறங்கிக் கொண்டுவிட்டனர். ஒரு வழியாக அவர்கள் சூதாட்ட அரங்கத்தை சென்றடைந்தபோது அலுப்பினால் சோர்ந்து போயிருந்தனர்.
எப்படி உள்ளே நுழைவதாம்? நாம் இன்னார் என்று உண்மையை சொன்னோமே யானல் ஆளுக்கு ஒரு தோட்டா பரிசாக கிடைப்பது நிச்சயம்!
இது ஒரு வேடிக்கையான விவகாரம் - பாரேன்!


அலட்டிக் கொள்ளாமல் உள்ளே நுழைந்தனர்....
ஹே... சைமன்! உன்னை சந்திக்க வின்ஸ் துடியாய் துடித்துக் கொண்டிருக்கிறார்!
சந்திக்கிறேன்...! ஆனால் முன்னறிவிப்பு இல்லாமல் போய் சந்திக்கவேண்டும். எனவே -
சைமனை பிடிக்கப் பாய்ந்த இரண்டு முரடர்களுக்கும் இடியென இறங்கியது குத்து.
இன்னும் வேண்டும் என்றால் எழுந்து நெருங்கி வாருங்கள்..
சத்!
கும்!
முரடர்களாக இருந்தாலும் புத்திசாலிகள் போலும்.. அடங்கி ஓய்ந்துவிட்டனர்.
மரியாதையாக உண்மையை சொல் - வின்ஸ் எங்கே இருக்கிறான்..? அவனுடைய அலுவல் அறையிலா?
ஆங்..!


அது பொய்...! வின்ஸின் அலுவல் அறையில் அப்போது உட்கார்ந்திருந்தவன் வின்ஸ் அல்ல - சாட்சாத் சைமன் தேடிய திருடனேதான்..
சைமன்... உன் துரதிர்ஷ்டம் நீ வந்திருப்பதை நான் ஜன்னல் வழியே பார்த்துவிட்டேன்! உன்னை உயிரோடு காண விரும்புகிரு ன் வின்ஸ்... ஆனால் நான் முந்திக் கொண்டு உன்னை தீர்த்துக் கட்டப் போகிறேன்.
சைமனும், ஜிப்பியும் ஏறிக் கொண்ட லிப்ட் மேலெழும்பிய சற்றைக்கெல்லாம், நடந்தது கேட்டு வின்ஸ் அங்கே ஓடோடி வந்தடைந்தான் நாலைந்து அடியாட்களோடு!
பாஸ்.. சைமன் நம் ஆட்கள் இருவரை அடித்துப் போட்டுவிட்டு லிப்ட்டில் ஏறி மேலே போய்க் கொண்டிருக்கிறான்!
ELEVATOR
என்னைக் காண வந்திருப்பானேயாகில் அவனுடைய முயற்சியில் வெற்றி பெற்று விடுவான். அவனை மடக்குங்கள். பேசத் தேவையான பலம் மிஞ்சி இ ருக்கிற அளவுக்கு அவன் உயிரோடு இருந்தால் போதும்.


உச்சி மாடியை சென்றடைந்ததும் லிப்ட்டை வேறு யாரும் பயன்படுத்த முடியாதவாறு அதை முடக்கிப் போட்டார் சைமன்.
ELEVATOR
நம்மை பின் தொடர முயற்சிப் பவர்களை தாமதிக்க வைக்கவே இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை!
அருமையான சூழ்ச்சி...!


ஓடி வா... இந்த அறைதான் என்று நினைக்கிறேன்!


பூனை போல் பதுங்கி உள்ளே நுழைந்து எட்டிப் பார்த்தபோது -
ஆங்... அந்த திருடன் அல்லவா இவன். ஆனால் அன்று மூஞ்சி முழுக்க இருந்த தழும்புகளை இன்று காணோம்!


மேஜை மீதிருந்த ஒரு பட்டனை அவன் அழுத்தியதும் கதவு தானாகவே மூடிக் கொண்டது. எந்தத் திருடனை பிடிக்க வின்ஸிடமிருந்து தகவல் சேகரிக்க எண்ணி வந்தார்களோ அந்த திருடனையே அங்கே சந்திப்போம் என்று சைமன் கனவுகூட கண்டதில்லை.
தழும்புகளை காணோமே என்று திகைக்கிறாயா... அந்த ரப்பர் முக உறையை இப்போது நான் மாட்டிக் கொண்டிருக்கவில்லை- அவ்வளவுதான்! நான் வின்ஸின் **கையாள்** ஷாண்டிலி!
அப்படித்தான் எண்ணி என் மீது அபார நம்பிக்கை வைத்திருக் கிறான் அந்த மடையன் வின்ஸ்... ஆனால் இந்த சத்திய வாக்குமூலத்தை அவனிடம் சொல்ல நீங்கள் உயிரோடு இருக்கப் போவதில்லை..! ஸாரி... ஒவ்வொன்றையும் விளக்கிக் கொண்டிருக்க எனக்கு இப்போது அவகாசமில்லை...
துப்பாக்கியின் விசை இழுக்கப் பட்டதும், சைமன் ஒரு பக்கம் சரிந்து விலகியதும் ஒரே சம்பவம் போல் நடந்தன. ஜிப்பி மறுபக்கம் விலகிக் கொண்டான்.
டுமீல்!



மறுகணம் - மேஜையை அப்படியே புரட்டித் தள்ளி ஷாண்டிலியை நிலை குலைந்து விழச் செய்தார் சைமன்..
கொலைகார சைத்தானே!
க்ராஷ்
இதற்கிடையே வின்ஸ் தன் ஆட்களோடு மாடிப்படி வழியே மேலேறி வந்து கொண்டிருந்தான்.
உடைத்துத் திற...! சுட்டுக் கொண்டே நுழைவோம்!
அந்த உரையாடல் தெளிவின்றி உள்ளே கேட்டது.
வின்ஸின் அடியாட்கள் வெளியே இருக்கிறார்கள். எதையும் கேட்டு அறிய இப்போது சந்தர்ப்பம் சரியில்லை.
டம் டம்
அந்த சீட்டுக் கட்டு பற்றிய மர்மத்தை விளக்கும் ஏதாவது ஒரு தடயம் ஷாண்டிலியின் வசம் இருக்கலாம் - தேடிப் பார்த்து விடுவோம்!


எதிரிகள் கதவை உடைக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டிருந்த வினாடிகளில் ஷாண்டிலியின் உடைமைகளை சோதனை போட்டு ஒரு சிறு டயரியை கைப்பற்றினார் சைமன்.
இதை எடுத்துச் செல்வோம்... அந்த மர்ம சீட்டுக்கட்டை இவன் எங்கே பதுக்கி வைத்திருக்கிறான் என்ற குறிப்பு ஒருவேளை இதில் சொல்லப்பட்டிருக்கலாம்.
சைமன் அந்த டயரியை தன் பாக்கட்டுக்குள் போட்டுக் கொண்ட வினாடியில் கதவு தகர்ந்து விழ, எதிரிகள் திமுதிமுவென்று உள்ளே புகுந்தனர். இடையிலிருந்த மேஜையை பலம் கொண்ட மட்டும் வேகமாக புரட்டித் தள்ளினார் சைமன்.
ஜிப்பி.... 'அவசர வழி'யை நோக்கி ஓடு - சீக்கிரம்.
கீழே நிறைய பேர் ஆயத்தமாக நிற்பதைக் கண்டார் சைமன்.
மொட்டை மாடி வழியாக நாம் தப்பினால்தான் உண்டு! கீழே துப் பாக்கியோடு காத்திருக்கிறார்கள் பார்...


வின்ஸின் அடியாட்கள் இரையை விரட்டும் புலி போல பாய்ந்தோடி வந்தார்கள்.
அவர்கள் நிச்சயமாக உயிரோடு தப்பியோடிவிட முடியாது...
டுமீல்!
அதிக உயரத்திலிருந்து குதிக்கும் துணிச்சல் சைமனை தவிர அங்கே ஜிப்பியிடமோ, எதிரிகளிடமோ கிடையாது...
நாம் தப்பிக்க முடியாது...! என்னால் உங்களுக்கு தொல்லை.
நம் கை ஓங்கித்தான் இருக்கிறது. வீணாக அலட்டிக் கொள்ளாதே - நான் பார்த்துக் கொள்கிறேன்!
மாடியின் விளிம்புக்கு சென்று விட்ட ஜோடி செய்வதறியாது திகைப்பதைக் கண்டு எதிரிகள் கிண்டலாக நகைத்தனர்.
நான் ரெடி என்று சொன்னதும் சுட்டுத் தள்ளுங்கள்!



மரண பீதியில் ஜிப்பியின் முகம் வெளிறிப் போய்விட்டது.
இரு.. ஏதாவது வழி இல்லாமல் போகாது!
தொலைந்தோம்... நெருங்கிவிட்டார்கள்!
அந்தக் கும்பலின் தலைவன் உத்தரவிடலானான்.
நெருங்கிச் சென்று காலை குறி வையுங்கள். இவர்களை உயிரோடு பிடித்து வரவேண்டும் என்பது பாஸின் உத்தரவு..
அருகே கிடந்த ஒரு சகடை சைமனின் பார்வையில் பட்டது.
ஓ... இதை வைத்து எவ்வளவோ சாதிக்கலாமே!


சட்டென்று அந்த சகடையை எடுத்து அருகிலிருந்த டெலிபோன் கேபிளோடு இணைத்தார்.
என் மீது தொற்றிக் கொள் ஜிப்பி.. இந்த கேபிள் நம் எடையை தாங்குமா இல்லையா என்பது நம் அதிர்ஷ்டத்தை பொறுத்தது.
அவர்கள் விரைந்து விலகிச் செல்வதைக் கண்ட எதிரிகள் சுடத் தொடங்கினார்கள்.. அங்கே எழுந்த ஆரவாரத்தைக் கேட்டு கட்டிடத்திற்கு வெளியே வந்தான் வின்ஸ்.
தப்பிச் செல்கிறார்கள்..!
முட்டாள்களே... விசைப்படகுக்கு ஓடுங்கள்.
தனக்கு தேவையானது கீழே காத்து நிற்பதை சைமனும் கண்டு கொண்டார்.
ஓ... அந்த மோட்டார் படகு நமக்குப் போதும்! ஜிப்பி... பிடியைவிடப் போகிறேன்.. நீரினுள் பாயத் தயாராக இரு...


மறு வினாடி....
மோட்டார் படகின் அருகில் நீர்ப்பரப்பை கிழித்துக் கொண்டு இறங்கினார்கள்...
சட்டென்று மேலெழும்பி -
டயரியில் நமக்கு தேவையான தகவல் இருக்கக்கூடும்.. இனியும் இங்கே நமக்கு வேலையில்லை.
சீக்கிரம் ஏறுங்கள்... ஸார்!
அடுத்த சில வினாடிகளில் அந்த படகு இயக்கம் பெற்றது.
நம் அதிர்ஷ்டம்... எரிபொருள் தாராளமாக நிரப்பப் பட்டிருக்கிறது.


இதற்கிடையே வின்ஸின் அதிவேக மோட்டார் படகு ஒன்றும் நிலையிலிருந்து சீறிக் கொண்டு கிளம்பியது..
கவலைப்படாதீர்கள் பாஸ்... நொடியில் விரட்டிப் பிடித்துவிடலாம்!
உச்ச வேகத்தில் விரட்டு... கோட்டை விட்டாயோ - கொன்று விடுவேன்!
வரவர இரு படகுகளுக்கு மிடையிலான தூரம் குறைந்து கொண்டே வந்தது..
போய் மோது..! அவர்கள் நம் பிடிக்குள் வந்ததும் அந்த சீட்டுக் கட்டை என்ன செய்தார்கள் என்ற உண்மையை கக்க வைப்போம்!
ஜிப்பி.. ஓடி வந்து என்னை பிடித்துக் கொள்.. பழைய யுக்தி எண் - 7 ஐ பின்பற்றுவோம்!


சட்டென்று படகை ஒரு வளை
வில் திருப்பி கரையோரம்
கொண்டு சென்றார் சைமன். படகு
எதிரிகளின் பார்வையிலிருந்து
மறைந்துவிட்ட நிலையில்
நீர்ப்பரப்பின் மேலே நீட்டிக்
கொண்டிருந்த மரக்கிளையை
லாவகமாக தாவிப் பற்றினார்
சைமன்- முதுகில்
ஜிப்பியை சுமந்தவாறு!


மறுகணம் - எதிரிகளின் படகு வந்து
இவர்களுடைய படகின் மீது டமால்
என்று மோதியது..
நாம் அந்தப் படகில்
இருந்திருந்தோமேயானால் - ?
டமால்!
படகில் நாம் இல்லை என்று
தெரிந்ததும் வின்ஸுக்கு இரத்தக்
கொதிப்பே வந்துவிடலாம்... வா
- ஓட்டம் பிடிப்போம்!


சைமன் இதைச் சொல்லி வாயை மூடுமுன்...
அதோ ஓடுகிறார்கள்...! நம்மை
ஏமாற்றிவிட்டு தப்பியோடிவிட
நினைக்கிறார்கள் போலும்...!
விடாதீர்கள் -


சைமனின் வேகத்திற்கு ஈடு கொடுத்து ஜிப்பியால் ஓட முடியவில்லை.
அந்த சின்னவன் சரியான சோதா... கிட்டே நெருங்கியதும் காலை குறி வையுங்கள். அந்த சீட்டுக்கட்டை எங்கே ஒளித்து வைத்திருக்கிறான் என்று தெரியவரும் வரை யாரும் செத்துப் போவதை நான் விரும்பவில்லை.
பாதையின் குறுக்கே நீண்டு கிடந்த ஒரு முரட்டு கொடியை சட்டென்று சற்றே உயர்த்திப் பிடித்தான் ஜிப்பி...
ஆ.. ஆ!
அழுத்தமாக இழு... ஜிப்பி!
கால் தடுக்க விழுந்து தடுமாறிய எதிரிகள் மீது புலிப் பாய்ச்சலாக பாய்ந்தார் சைமன்.
அகப்பட்டுக் கொண்டீர்களா?


அம்முவரின் வசம் இருந்த ஆயுதங்கள் பிடுங்கப்பட்டன.
அந்த சீட்டுக்கட்டு பற்றிய மர்மத்தை இப்போது கேட்டால் வின்ஸ் ஒருவேளை விளக்க முன் வரலாம்!
அவ்வளவு சுலபத்தில் இரகசியத்தை வெளியிட்டு விட மாட்டோம்... தம்பிகளா!
அடித்தாலும், உதைத்தாலும் வெளியில் சொல்லக்கூடாத அளவுக்கு அந்த இரகசியத்தின் மதிப்பு இருக்கக்கூடும் என்பது சைமன் ஏற்கனவே யூகித்த உண்மைதான்..
ஓ.. அவ்வளவு பெரிய இரகசியமா? சரி - ஒன்றை நீ தெரிந்து கொள்.. அந்த சீட்டுக்கட்டு என் வசம் இல்லை. அதை நான் திருடவேயில்லை. ஆனால் அதில் அடங்கி உள்ள மர்மத்தை எப்படியும் கண்டுபிடித்தே தீருவேன். என் மீது அபாண்டமாக பழி சுமத்திய கயவனை எப்படியும் சட்டத்தின் பிடியில் கொண்டு வருவேன்.
ஆத்திரத்தில் தேவைக்கு அதிகமான உண்மைகளை வெளியிட்டுவிட்டு, ஜிப்பியோடு அங்கிருந்து ஓட்டம் பிடித்தார்சைமன்...!
அவன் புளுகுகிறான்... அவன் திருடவில்லை என்றால் வேறு யார் சீட்டுக் கட்டை திருடி இருப்பார்கள்?
ஷாண்டிலிக்கும் சைமனுக்குமிடையே கைகலப்பு ஏற்பட்டது... ஒருவேளை சீட்டுக் கட்டு ஷாண்டிலி வசம் இருக்கலாம்.... ஓடி வாருங்கள் - அவன் இப்போது எங்கு இருப்பான் என்று எனக்குத் தெரியும்!


இருவரும் நகருக்கு திரும்பினர்.. தன்னையும் அறியாமல் எதிரி தன்னை முந்திக் கொள்ள வாய்ப்பு நல்கிவிட்ட சைமன் ஷாண்டிலியின் டயரியை ஆராய்ந்தார்.
யெல்லோ டாப் என்ற பெயர் அடிக்கோடிடப்பட்டிருக்கிறது
வாடகைக்கு ஒரு மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு இருவரும் யெல்லோ டாப் நோக்கி விரைந்தனர்.
என்ன ஒரு வேகத்தில் போகிறான் பார்..
ஹெலிகாப்டருக்கான எஞ்சினை அதில் பொருத்தியிருப்பானோ?
முடிந்தவரை ஓய்வே எடுக்காமல், குறுக்குப் பாதைகளை தேர்ந்தெடுத்து குறுகிய நேரத்தில் இலக்கை சென்றடையும் நோக்கத்தோடு சென்றார் சைமன்.
ஸார்... கொஞ்சம் மெல்லத்தான் போங்களேன்... பயமாக இருக்கிறது எனக்கு.
பயப்படாதே... இலக்கை நெருங்கிவிட்டோம்!


யெல்லோ டாப் ஆற்றை சென்றடைந்ததும் அப்பகுதியை நுணுக்கமாக ஆராய்ந்தார்கள்.
அதோ... ஷாண்டிலியின் கார் - பாழடைந்த சுரங்கவாசல் அருகே...!
கார் காலியாக நிற்கிறது! நம் நண்பர் அருகில் எங்கோ பரபரப்பாக காரியம் பண்ணிக் கொண்டிருக்கலாம்
ஆற்றில் நீரோட்டம் படு பயங்கரமாக இருந்தது. நீச்சல் சாம்பியன் கூட நீந்திக் காட்ட முடியுமா என்றால் சந்தேகமே!
இந்த சாகஸ வித்தை உனக்கு ஒத்து வராது ஜிப்பி. பேசாமல் நீ கரையிலே இரு!
இல்லை ஸார்..! ஷாண்டிலியோடு விவகாரம் என்று வரும்போது என் ஒத்தாசை உங்களுக்கு தேவைப்படலாம்!
ஒரு வழியாக மறுகரையை சென்றடைந்த நண்பர்கள் இருவரும் சுரங்க நுழைவாயில் வழியே ஜாக்கிரதையாக நுழைந்தனர்.
பாழடைந்த சுரங்கம் - ஷாண்டிலி மாதிரியான போக்கிரிகளோடு ஒத்துப் போகக்கூடிய சூழல் இது!
தண்டவாளம் லேசாக அதிர்கிற மாதிரி இல்லை?


தண்டவாளத்தின் மீது செவியை வைத்து கவனமாக கேட்டார் சைமன்.
யாரோ அருகாமையில் பூமியை தோண்டிக் கொண்டிருப்பதாக தோன்று கிறது .. ஓசையை பின்பற்றிச் செ சுலபமாக கண்டு த்துவிடலாம்.
இதற்கிடையே, ஷாண்டிலியின் கார் அருகே வந்து நின்றது வின்ஸின் கார்.
ஷாண்டிலி உள்ளேதான் விஷமம் பண்ணிக் கொண்டிருக்கிறான். சீட்டுக்கள் அவன் கைவசம் இருந் தால் எங்கே போக வேண்டும் என்று அவை அவனுக்கு தெரிவித்திருக்கும்!
அவனுக்கு அந்த இடத்திலேயே சமாதி என்பது நிச்சயம்!
ஓசை வரும் திசையில் வேகமாக முன்னேறிச் சென்று முடிவில் -
நில்...! அவன் என்னதான் செய்து கொண்டிருக்கிறான் என்று தெரிந்து கொண்டு பிறகு நெருங்குவோம். தம்பி எதையோ மும்முரமாக தேடுவது போல் தோன்றுகிறது!
உற்றுப் பாருங்கள் - பெட்டி மீது சீட்டுக்கட்டு கிடக்கிறது!


அடுத்து அங்கே நடந்தது, சைமன் கூட கொஞ்சமும் எதிர்பாராத ஒன்று..! வேறொரு பாதை வழியே நான்கு உருவங்கள் திடும் என தோன்றின.
ஹே... வின்ஸ் - பொறு..! வேண்டாம் -
ஷாண்டிலியின் நம்பிக்கை துரோகத்தால் கொதித்துப் போயிருந்த வின்ஸை எந்த சமாதானமும் சாந்தப்படுத்த முடியாதுதான்.
அடேய்... நம்பிக்கை துரோகி...! நீ இழைத்த குற்றத்திற்கு உடனடி மரணம்தான் உனக்கு சரியான தண்டனையாக இருக்க முடியும்!
ஷாண்டிலியின் வாக்குமூலத்தில் தான் சைமன், ஜிப்பி இருவரின் எதிர்காலமும் தொங்கிக் கொண்டிருந்ததால் வின்ஸ் ஷாண்டிலியை கொல்வதை அனுமதிக்க முடியாது...
வின்ஸ்...! ஷாண்டிலி உயிரோடு வேண்டும் எனக்கு!
ஹே... நீ - நீயா?


தண்டவாளத்தில் நிறை டிரக்கில் தொற்றிக் கொண்டு ஜிவ்வென்று வின்ஸ் கூட்டத் தினரை நோக்கி விரைந்தார் சைமன்.
சுடுவதில் நீ சமர்த்தன் என்றால் எங்கே என்னை சரியாக குறி வை பார்க்கலாம்?
அந்த சவாலை நிஜமாகவே ஏற்றுக் கொண்டு துப்பாக்கியை உயர்த்தி குறி வைப்பதிலேயே கவனமாக இருந்த வின்ஸை அசுர வேகத்தில் முட்டித் தள்ளியது அந்த டிரக்.
விடாதீர்கள் அவனை!
படீர்!
டிரக் தடம் புரண்ட வேகத்தில் அருகில் நின்றிருந்தவன் மீது பாய்ந்தார் சைமன்.
ஏய்.. நீ -
இது - உனக்கு...! வாங்கிக் கொள்...!


அந்த இடம் மிக குறுகலாக இருந்ததால் எதிரிகள் ஆயுதங்களை கையாள அனுகூலமாக இல்லை.
எங்கே போகிறாய் - இவ்வளவு அவசரமாக!
அங்கே நிலவிய குழப்பமும் அமளியும் ஷாண்லிக்கு வாய்ப்பாக அமைந்தது. ஆனால் ஜிப்பி, நெருங்கி வந்த ஷாண்டிலியின் மீது ஒரே பாய்ச்சலாக பாய்ந்தான்.
ஜிப்பி...! கையில் துப்பாக்கி வைத்திருக்கிறான் - ஜாக்கிரதை!



சில நிமிடங்களுக்குப் பின் - தடம் புரண்டு கிடந்த டிரக்கை தூக்கி நிறுத்தி அத்தனை பேரையும் அள்ளிப் போட்டு நிரப்பினார்கள்.
இந்த கடாமாடுகள் மீது நீ கவனமாக இரு ஜிப்பி! ஷாண்டிலி இத்தனை பிரயத்தனத்தப்பட்டு தோண்டி எடுத்த பெட்டிகளுக்குள் அப்படி என்னதான் இருக்கிறது என்று பார்த்து விடுவோம்.. சிதறிக் கிடக்கும் இந்த சீட்டுக்கள் பற்றிய மர்மம் ஏறத்தாழ எனக்கு புரிந்து விட்டது..!
அந்த புதிரை தெரிந்து கொள்ள துடியாய் துடித்துக் கொண்டிருக்கிறேன்.. சீக்கிரம் தெளிவு படுத்துங்கள்.
ஓடிச் சென்று ஒரு பெட்டியை உடைத்துத் திறந்தார் சைமன்.
க்ராக்!
உள்ளே - தங்கக் கட்டிகள் டார்ச் வெளிச்சத்தில் பளபளத்தன..
ஸார்... அத்தனையும் தங்கம்!


பல வருடங்களுக்கு முன்
கொள்ளையடித்த இந்த தங்க
கட்டிகளை இங்கே இரகசியமாக
புதைத்து வைத்திருந்த பின்னர்,
எல்லோரும் கொள்ளை சம்ப
வத்தை மறந்துவிட்ட பிறகு
சாவகாசமாக வந்து தோண்டி
எடுத்துக் கொள்ள வின்ஸ் திட்ட
மிட்டிருக்கலாம். புதிரான
அமைப்புடைய இந்த பாழடைந்த
சுரங்கத்தினுள் புதையல்
இருக்கும்
இடத்தை மறந்துவிடாமலிருக்க
வேண்டுமே..?
சிதறிக் கிடந்த சீட்டுக்களை சேகரித்து
அவற்றை நுட்பமாக ஆராய்ந்தார் சைமன்
இதோ பார்த்தாயா... இந்த சீட்டு
இரண்டாக பிரிக்க வருகிறது.
புதையல் இருக்கும் இடத்தின்
வரைபடம் மெல்லிய காகிதத்தில்
வரையப்பட்டு இடையில் வைத்து
ஒட்டப்பட்டிருக்கிறது. சீட்டுக்
கட்டை ஷாண்டிலி திருட திட்ட
மிட்டது ஏனென்று இப்போது
புரிகிறதல்லவா?
மெள்ள சுதாரித்து எழுந்த தடியர்கள்
இருந்த இடத்திற்கு வந்தார் சைமன்..
ஷாண்டிலி ஆங்காரத்தோடு
பொருமினான்.
வின்ஸின் பெட்டகத்தில் கை
வைத்த குற்றம் உன் மீது விழ
நாடகமாடினேன். ஆனால்
ன்னைவிட நீ புத்திசாலி என்று
நிரூபித்துவிட்டாய்..
கோர்ட்டில் நீ உண்மையை ஒப்புக்
கொண்டு எங்களுக்கு விடுதலை
வாங்கிக் கொடுக்கப் போகிறாய்.


சில மணி நேரம் கழித்து - இரண்டு கார்கள் லாஸ் வகாஸ் போலீஸ் தலைமையகத்தின் முன் வந்து நின்றன. அவற்றில் ஒன்றில் ஐந்து முரடர்கள் கை, கால்கள் பிணைக்கப்பட்டுக் கிடந்தார்கள்.
காரில் வருவது - சைமன் அல்லவா...? ஜெயிலிலிருந்து தப்பியோடிப் போன கைதிகள்!
குட் மார்னிங் கமிஷனர் - துப்பாக்கியில் கை வைக்க அவசியமேயில்லை!


என்ன கொண்டு வந்திருக்கிறேன் என்று அறிந்தால் மேள தாளத்தோடு மாலை போட்டு வரவேற்பு கொடுப்பீர்கள் எனக்கு...!
நடந்ததை விவரமாக எடுத்துரைத்த சைமன் தான் பிடித்து வந்த குற்றவாளிகளையும், மீட்டு வந்த கொள்ளைப் பொருட்களையும் போலீஸார் வசம் ஒப்படைத்தார். உடனடி விடுதலை கிடைப்பதோடு கொள்ளைப் பொருளில் ஒரு பகுதி அவருக்கு வெகுமதியாக கிடைக்கும் என்றும் கமிஷனர் தெரிவித்து பாராட்டினார்...!




பிரகாஷ் பப்ளிஷர்ஸ் சார்பாக 'லயன் காமிக்ஸ்' மாத இதழை அச்சிடுபவரும், வெளியிடுபவரும், ஆசிரியரும் S. விஜயன். முகவரி : பிரகாஷ் பப்ளிஷர்ஸ், தபால் பெட்டி எண் : 374, சிவகாசி - 626 123. போன் : 20649. வெளியீடு எண் : 84
அச்சிட்டோர் : தி விஜய் புக்ஸ், சிவகாசி - 626 123.

லயன் காமிக்ஸ்


லயன் காமிக்ஸ்
F.B.I. ஏஜெண்ட் காரிகன் தோன்றும்
இரத்தமில்லா யுத்தம்!
அடுத்த வெளியீடு!
விலை ரூ. 3/=


ரிப் கிர்பி & டெஸ்மாண்ட் தோன்றும்-
கானகக் கோட்டை!
செப்டம்பர் வெளியீடு!
லயன் காமிக்ஸ்
விலை ரூ. 3/=

லயன் காமிக்ஸ்

# ஏஜெண்டுகள் தேவை...!

**கீழ்க்கண்ட ஊர்களில் நமது காமிக்ஸ்களை விற்பனை செய்திட ஆர்வமான ஏஜெண்டுகள் தேவை!**

1) உடுமலைப்பேட்டை
2) ஆனைமலை
3) பவானி
4) செஞ்சி
5) ஸ்ரீவில்லிபுத்தூர்
6) மானாமதுரை
7) தேவகோட்டை
8) வாழப்பாடி
9) பொம்மிடி



10) கம்பம்
11) நத்தம்
12) அம்பாசமுத்திரம்
13) வள்ளியூர்
14) திருச்செந்தூர்
15) சுரண்டை
16) ஆற்காடு
17) செங்கம்
18) குன்னூர்
19) விருதுநகர்

விபரங்களுக்குத் தொடர்பு கொள்க:

## பிரகாஷ் பப்ளிஷர்ஸ்,

த. பெ. எண்: 374, சிவகாசி - 626 123

போன்: 20649 & 21159

Regd. No: TN/VR/29 R.N. 49613/87